Adi Paadi

Ayyappa · Tamil

விருத்தம்

அத்வைத வஸ்துவாய் ஆதி பரமாத்மனாய்
அசலனாய் அகுண குணணாய்

அமரருக்கு அதிபனாய் அடியவர்க்கு எளியனாய்
என் ஹரிஹரர்க்கு ஒரு மைந்தனாய்

சுத்த ப்ரஹ்ம சாட்சாத்கார ஜோதியாய் நிற்க்கும்
உந்தன் துரிய லீலா வைபவங்கள் பலவென்று

மறைகள் சொல்லுகின்றதேதும் அறியேன்
பித்தனாய் நினது புகழ் பேசித் திரிந்து பிதற்றுகின்றேன்

நின் பெரும்கொயிலெய்தினேன்
என் பிழைகள் பொறுத்தாள வருவாய்

தத்துவமனைத்தும் ஒரு முத்திரை பதித்து தந்த
சற்குருநாதனே
சதமதன பிரகாச கலசமுனி விசுவாச
சபரிமாமலை வாசனே

உனை ஆடிப்பாடி அலங்காரம் செய்திட
அழைக்கின்றோம்
நீ வருக வருக வருகவே

பல்லவி:

ஆடிப்பாடி அலங்காரம் செய்திட
அய்யனை அழைத்திடுபவோம் (எங்கள் அய்யப்பனை)

அனுபல்லவி:
மத கஜ வாஹனனாம் மதன ஸுகுமாரனை மங்கள
மூர்த்தியாம் மாமணிகண்டனை (ஆடி)

சரணம்:
கருணைக்கடலே உன்னை காணவே ஆவல்
கொண்டோம்
சபரிகிரீ தன்னிலெ தவக்கோலம் கொண்டாயே
பொன்னம்பல வாஸனை சாந்த சொரூபனை ஆனந்த
ஜோதியை ஆண்டவனை நாம் (ஆடி)